# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC- 68 of 2024

## வழக்கு சாட்சி:PW - 3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரமேஷ் | தேதி : | 29.01.2025 |
| தந்தை பெயர்: | செல்வராஜ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 29.01.2025.

**முதல் விசாரணை**

நான் அரமநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நானும் என் அண்ணன் தவசி முத்து என்பவரும் கடந்த 10.04.2022 ம் தேதி மதியம் சுமார் 2.15 மணிக்கு பிள்ளைக்குளம் பஸ்ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்த போது நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் வந்து எங்கள் இருவர் முன்னிலையில் எதிரியை கைது செய்து விசாரிக்க எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் முதலாவது கையொப்பம் என் அண்ணன் தவசி முத்து என்பவர் கையொப்பம் இட்டுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ-3 ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையில்தான் பதிவு செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதன்பின்பு காவல் ஆய்வாளர் எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு

அன்றையதினம் 3.30 மணிக்கு எதிரியின் வீட்டின் பின்புறம் உள்ள புளியமரத்து அடியில் மறைத்து வைத்திருந்த இந்த வழக்கிற்கு எதிரி பயன்படுத்திய கொம்பு கைப்பிடியுடன் கூடிய அரிவாள் ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து எங்கள் இருவர் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அரிவாள் இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. அந்த அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் முதலாவதாக என் அண்ணன் தவசி முத்து கையொப்பம் போட்டுள்ளார். அவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகும். எங்கள் இருவர் முன்னிலையில்தான் போலிசார் வழக்கு சொத்தை கைப்பற்றினார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC- 68 of 2024**

**வழக்கு சாட்சி:PW - 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தவசிமுத்து | தேதி : | 29.01.2025 |
| தந்தை பெயர்: | செல்வராஜ் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 29.01.2025.

**முதல் விசாரணை**

நான் அரமநேரியில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.3 எனது தம்பி ஆவார். நானும் என் தம்பி ரமேஷ் என்பவரும் கடந்த 10.04.2022 ம் தேதி மதியம் சுமார் 2.15 மணிக்கு பிள்ளைக்குளம் பஸ்ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்த போது நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் வந்து எங்கள் இருவர் முன்னிலையில் எதிரியை கைது செய்து விசாரிக்க எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் முதலாவது கையொப்பம் என் தம்பி ரமேஷ் என்பவர் கையொப்பம் இட்டுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ-5 ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையில்தான் பதிவு செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

அதன்பின்பு காவல் ஆய்வாளர் எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு அன்றையதினம் 3.30 மணிக்கு எதிரியின் வீட்டின் பின்புறம் உள்ள புளியமரத்து அடியில் மறைத்து வைத்திருந்த இந்த வழக்கிற்கு எதிரி பயன்படுத்திய கொம்பு கைப்பிடியுடன் கூடிய அரிவாள் ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து எங்கள் இருவர் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அரிவாள் இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. அந்த அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் 2வதாக என் தம்பி ரமேஷ் கையொப்பம் போட்டுள்ளார். அவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகும். எங்கள் இருவர் முன்னிலையில்தான் போலிசார் வழக்கு சொத்தை கைப்பற்றினார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.